RS Polyclinic
OUR EXPERIENCED DOCTORS
Dr M. Rajkumar
MBBS MS DNB(Vascular)
98410 25996
Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari
MS (Ophal) DO MSE
9444 288784
Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar
MBBS MS (Ms)
9445 401793
Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R
MBBS MS (Vascular)
9884 650945
Sr Vascular Surgeon
Dr Salins R
MBBS MD
87780 87742
General Physician
Dr Praveena E
MBBS MS (ENT)
9944 100443
Sr ENT Surgeon

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 22 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 134

திருவண்ணாமலை தீபத் திருவிழா: 8,012 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

திருவண்ணாமலை – 22 நவம்பர், 2026 திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா மற்றும் பௌர்ணமியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் இருந்து 8,012 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாகத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிப்பை விழுப்புரம் கோட்ட மேலாண் இயக்குநர் ச. ஸ்ரீதரன் வெளியிட்டுள்ளார்.

நவம்பர் 22 முதல் நவம்பர் 25-ஆம் தேதி வரை நான்கு நாள்களுக்கு இந்தச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

நாள் வாரியான சிறப்புப் பேருந்து விவரம்:

நவம்பர் 22-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை விழுப்புரம் மண்டலத்திலிருந்து 195, கடலூர் மண்டலத்திலிருந்து 101, திருவண்ணாமலை மண்டலத்திலிருந்து 566, வேலூர் மண்டலத்திலிருந்து 205, காஞ்சிபுரம் மண்டலத்திலிருந்து 35, திருவள்ளூர் மண்டலத்திலிருந்து 30 என மொத்தம் 1,132 சிறப்புப் பேருந்து நடைகள் இயக்கப்பட உள்ளன.

நவம்பர் 23-ஆம் தேதி பௌர்ணமியை முன்னிட்டு விழுப்புரம் மண்டலத்திலிருந்து 284, கடலூர் மண்டலத்திலிருந்து 180, திருவண்ணாமலை மண்டலத்திலிருந்து 802, வேலூர் மண்டலத்திலிருந்து 485, காஞ்சிபுரம் மண்டலத்திலிருந்து 82, திருவள்ளூர் மண்டலத்திலிருந்து 45 என மொத்தம் 1,878 சிறப்புப் பேருந்து நடைகள் இயக்கப்பட உள்ளன.

நவம்பர் 24-ஆம் தேதி கார்த்திகை தீபம் மற்றும் பௌர்ணமியை முன்னிட்டு விழுப்புரம் மண்டலத்திலிருந்து 500, கடலூர் மண்டலத்திலிருந்து 291, திருவண்ணாமலை மண்டலத்திலிருந்து 1,212, வேலூர் மண்டலத்திலிருந்து 818, காஞ்சிபுரம் மண்டலத்திலிருந்து 152, திருவள்ளூர் மண்டலத்திலிருந்து 82 என மொத்தம் 3,055 சிறப்புப் பேருந்து நடைகள் இயக்கப்பட உள்ளன.

நவம்பர் 25-ஆம் தேதி விழுப்புரம் மண்டலத்திலிருந்து 332, கடலூர் மண்டலத்திலிருந்து 231, திருவண்ணாமலை மண்டலத்திலிருந்து 874, வேலூர் மண்டலத்திலிருந்து 345, காஞ்சிபுரம் மண்டலத்திலிருந்து 102, திருவள்ளூர் மண்டலத்திலிருந்து 63 என மொத்தம் 1,947 சிறப்புப் பேருந்து நடைகள் இயக்கப்பட உள்ளன.

சென்னை கோயம்பேடு, மாதவரம், அடையாறு உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும், புதுச்சேரி, திண்டிவனம், சேலம், பெங்களூரு, திருப்பத்தூர், திருப்பூர், கோயம்புத்தூர், வேலூர், ஏற்காடு, ஆரணி, செய்யாறு, காஞ்சிபுரம், வந்தவாசி, சேத்துப்பட்டு, விழுப்புரம், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம், திருக்கோவிலூர், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்தும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

பக்தர்கள் கார்த்திகை தீபத் திருவிழாவைச் சிரமமின்றிக் கொண்டாடும் வகையில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.